இனிமையான குழந்தைகளே! இந்த நேரத்தில் உங்களது பிறப்பு வைரத்திற்கு சமமானது, ஏனெனில் நீங்கள் ஈஸ்வரிய குழந்தைகளாக ஆகியிருக்கிறீர்கள், சுயம் ஈஸ்வரன் உங்களுக்கு படிப்பு கற்பிக்கின்றார், நீங்கள் தூர தேசத்தில் வசிப்பவர்கள், விசால புத்தியுடையவர்களாக ஆகிறீர்கள்.

கேள்வி: குழந்தைகளாகிய நீங்கள் எந்த முயற்சியினால் தூர தேசத்தில் வசிப்பவர்களாக மற்றும் விசால புத்தியுடையவர்களாக ஆகிக் கொண்டிருக்கிறீர்கள்?

பதில்: தந்தையின் நினைவின் மூலம் தூர தேசத்தில் வசிப்பவர்களாகவும், படிப்பின் மூலம் விசால புத்தியுடையவர்களாகவும் ஆகிறீர்கள். தூர தேசத்தில் வசிப்பவர் என்றால் தூர தேசத்திலிருக்கும் தந்தையை நினைவு செய்வதாகும். மன்மனாபவ என்பதன் பொருள் தூர தேசத்தில் வசிப்பதாகும். விசால புத்தி என்றால் சிருஷ்டியின் முதல், இடை, கடையின் ஞானம் புத்தியில் இருப்பதாகும். நீங்கள் முதலில் தூர தேசத்தில் வசிப்பவர்களகவும், பிறகு விசால புத்தியுடையவர்களாக ஆக வேண்டும்.

பாடல்: நமது தீர்த்த ஸ்தானம் தனிப்பட்டது .......

ஓம்சாந்தி. நமது தீர்த்தம் (யாத்திரை) தனிப்பட்டது என்ற பாட்டு குழந்தைகள் கேட்டீர்கள். நமது தீர்த்த ஸ்தானம் (புனித தலம்) மிகத் தொலைவில் இருக்கிறது. அதனால் தான் தூர தேசத்தில் வசிப்பவர்களாக ஆகுங்கள் என்று குழந்தைகளுக்குக் கூறப்படுகின்றது. தூர தேசத்தில் இருக்கக் கூடியவர் விசால புத்தியுடையவர் களாக ஆகுங்கள் என்று கூறுகின்றார். அனைவரின் புத்தி இந்த நேரத்தில் அசுத்தமானதாக இருக்கிறது அல்லவா! மாயை அசுத்த புத்தியுடையவர்களாக ஆக்கி விட்டது. ஆக குழந்தைகளின் புத்தி தூர தேசத்து புத்தியாகும் அதாவது தூரத்தில் இருப்பவரின் நினைவு மற்றும் விசால புத்தி என்றால் முழு சிருஷ்டியின் முதல், இடை, கடையின் ஞானம் புத்தியில் இருப்பதாகும். மற்ற அனைவரின் புத்தியும் அல்ப புத்தியாகும், பரமாத்மா என்று மட்டுமே கூறுகின்றனர், ஆனால் அறியவில்லை. இங்கு எந்த மகாத்மாவும் கிடையாது. இங்கு தந்தை வந்து தூர தேசிகளாக ஆக்குகின்றார், ஆனால் தூர தேசி குழந்தைகள் மிகவும் குறைவாக இருக்கின்றனர். ஞானம் அதிகம் உள்ளது, ஆனால் தூர தேசிகளாக குறைவாக இருக்கின்றனர், அதாவது தந்தையின் நினைவு குறைவாக இருக்கிறது. மற்றபடி சாதுக்கள் சாதனை செய்கின்றனர், அரசர் எவ்வழியோ மக்கள் அவ்வழி லி இந்த நேரத்தில் தூய்மை இல்லாமல் இருக்கின்றனர். மகாத்மா என்று பெயர் வைத்துக் கொள்கின்றனர், ஆனால் மகான் ஆத்மாக்களாக யாரும் கிடையாது. சிலர் கிருஷ்ணரை மகாத்மா என்று கூறுகின்றனர். இது சரி தான், ஏனெனில் அது சிரேஷ்டமான உலகமாகும். இது தரத்தில் குறைந்த உலகமாகும். அரசர் எவ்வழியோ மக்கள் அவ்வழி. ஆனால் இந்த நேரத்தில் இராஜாக்கள் யாரும் கிடையாது. பிரஜைகளின் மீது பிரஜைகளின் இராஜ்யம். சாஸ்திரங்கள் படிப்பதால் நீங்கள் என்னை அடைந்து விட முடியாது என்று தந்தை கூறுகின்றார். மேலும் யாரும் முக்திக்கு சென்று விடவும் முடியாது. எதுவரை என் மூலம் என்னை அறியவில்லையோ, மேலும் எதுவரை கல்பத்தின் கடைசியில் நான் வரவில்லையோ! மனிதர்கள் கிருஷ்ணரை நினைவு செய்கின்றனர், அவர் இந்த தேசத்தை சார்ந்தவர். தூர

தேசத்தில் வசிப்பவர் கிடையாது. ஆக தந்தையை நினைவு செய்வது என்றால் தூர தேசத்தில் வசிப்பதாகும். மன்மனாபவ என்பதன் பொருள் தூர தேசத்தில் வசிப்பதாகும். யார் தந்தையை அறியவில்லையோ பிறகு தந்தையிடமிருந்து ஆஸ்தி எப்படி கிடைக்கும்? வரவில்லை யெனில் பிறகு வழி எப்படி கிடைக்கும்? மிகவும் புரிந்து கொள்ள வேண்டிய விசயமாகும். நாயகன் மீது மிகுந்த அன்பு வேண்டும். நீ ஒருவர் கிடைத்து விட்டால் அனைத்தும் கிடைத்து விடும் என்று கூறு கின்றனர். ஆக ஒரே ஒருவரிடமிருந்து அனைத்தும் பிராப்தியாக கிடைத்து விடுகிறது. இப்படிப்பட்ட நாயகன் மீது அதிக அன்பு இருக்க வேண்டும். இது எல்லையற்ற ஞானமாகும். விராட நாடகம் என்றால் பல விதங்கள், அதில் பல கருத்துகள் உள்ளன. அதனால் தான் துவேத இராஜ்யம் என்று கூறுகின்றனர், துவைதம் என்றாலும் தைத்யம் (இரண்டு வகை) என்றாலும் ஒரே விசயம் தான். தைத்யம் (அசுரன்) என்று இராவணன் கூறப்படுகிறார். தேவதையாக ஆக்கக் கூடியவர் ஒரே ஒரு தந்தை ஆவார். மனிதனிலிருந்து தேவதை என்று கூறுகின்றார், எவ்வளவு எளிய விசயமாக இருக்கிறது! நீங்கள் விசால புத்தியுடையவர்களாக இருக்கிறீர்கள். சாஸ்திரங்கள் படிப்பவர்களை விசால புத்தியுடையவர்கள் என்று கூறமாட்டோம். அது பக்தியாகும். ஞானம் தனிப்பட்டது, பக்தி தனிப்பட்டது. ஞானத்தை ஞானக் கடலான தந்தை கொடுக்கின்றார். நீங்கள் வைரம் போன்று இருந்தீர்கள், இப்போது சோழி போன்று ஆகிவிட்டீர்கள். இப்போது தந்தை வைரம் போன்று ஆக்குகின்றார். நீங்கள் விசால புத்தியுடையவர்களாக ஆவதால் உலகை இராஜ்யம் செய்கிறீர்கள். அங்கு அகண்ட, உறுதியான இராஜ்யம் இருக்கும். ஆக விசால புத்தியானது ஞானத்தின் மூலம் ஏற்படுகிறது.

சத்யுகத்தில் சுகம் இருந்தது, பிறகு சிறிது சிறிதாக ஏணியில் கீழே இறங்குகிறோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஏறுவதற்கு ஒரு விநாடியில் உயரதாண்டி (ஜம்ப்) குதித்து விட்டால் போதும், தூய்மையின்மையிலிருந்து தூய்மை என்று பாய்ந்து விட வேண்டும். கீழே இறங்குவதற்கு 5 ஆயிரம் ஆண்டுகள் ஆகிறது. நீங்கள் அனைவரும் வரிசைக்கிரமமான முயற்சியின்படி விசால புத்தியுடையவர்களாக ஆகியிருக்கிறீர்கள். இந்த ஞானம் இப்போது கிடைக்கிறது, சத்யுகத்தில் இந்த ஞானம் இருக்காது. முந்தைய கல்பத்தைப் போலவே சங்கமத்தில் தந்தை வருகின்றார். சத்யுகத்தில் விசால புத்தியுடையவர்கள் என்ற கூறமாட்டோம். வைரம் போன்ற பிறப்பு என்று சத்யுகத்திற்குக் கூற முடியாது. இந்த நேரம் தான் வைரம் போன்ற பிறப்பாகும். ஏனெனில் இந்த நேரத்தில் நீங்கள் ஈஸ்வரிய குழந்தைகளாக இருக்கிறீர்கள். ஈஸ்வரன் உங்களுக்கு படிப்பு கற்பிக்கின்றார். இந்த மகிமை தந்தையினுடையது, பரமாத்மா பதீத பாவன் எனில் சர்வவியாபி யாக எப்படி இருக்க முடியும்? ஆனால் மனிதர்கள் கீழான புத்தியுடையவர்களாக இருப்பதால் எவ்வளவு தான் புரிய வைத்தாலும் புரிந்து கொள்வது கிடையாது. ஆக அவர்கள் பிராமண குலத்தை சார்ந்தவர்கள் கிடையாது என்று புரிந்து கொள்ளுங்கள். யார் தேவதா குலத்தை சார்ந்தவர்களோ அவர்கள் தான் ஞானத்தைப் புரிந்து கொண்டு பிராமணர்களாக ஆவார்கள். தந்தை ஞானக் கடலானவர். நீங்களும் ஞானக் கடலாக ஆகிறீர்கள். பிறகு நீங்கள் சுகம், சாந்தியின் கடலாக ஆகிறீர்கள். சத்யுகத்தில் அளவற்ற சுகம் இருக்கும். ஆக தந்தையின் மூலம் உங்களுக்கு அனைத்து சுகங்களின் பிராப்தி கிடைக்கிறது. கடைசியில் ஞானம், சுகம், சாந்தியின் கடலாக ஆவீர்கள், ஏனெனில்

மற்றவர்களுக்கும் கொடுக்கிறீர்கள். இப்போது பாருங்கள் எவ்வளவு துக்கம், அசாந்தி இருக்கிறது! பெரியவர்களுக்கு தூக்கம் வருவது கிடையாது. குழந்தைகளாகிய உங்களுக்கு எவ்வளவு குஷி இருக்கிறது! ஏனெனில் நீங்கள் தந்தையை அறிவீர்கள். உலகத்தினர் ஓ இறை தந்தையே! பரம்பிதா பரமாத்மா என்ற கூறுகின்றனர், ஆனால் அறியவில்லை. எவ்வளவு காலமாக பக்தர்கள் பக்தி செய்கின்றனர்! நினைவு செய்து வருகின்றனர்! ஆனால் எதுவும் அறியாமல் இருக்கின்றனர். தந்தை தனது மற்றும் படைப்பின் அறிமுகத்தை சுயம் வந்து கொடுக்கின்றார். நீங்கள் மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும். இவர் தந்தை, எந்த மகாத்மா கிடையாது என்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் யாரை சந்திக்க வருகிறீர்கள்? என்ற படிவத்தில் கேட்க வேண்டும் என்று பாபாவிற்கு சிந்தனை வருகிறது. மகாத்மாவை சந்திப்பதற்காக என்று கூறுவர். இவர் மகாத்மா கிடையாது என்ற கூறுங்கள். பிரம்மா குமார், குமாரி என்ற பெயர் இருக்கிறது எனில் இவர்களது தந்தை பிரஜாபிதா பிரம்மா இருப்பார் அல்லவா! ஆக மகாத்மாவாக எப்படி இருக்க முடியும்? நன்றாக விவாதம் செய்யக் கூடியவர்களாக, புத்தியுடைவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் எழுதி விட்டும் செல்கின்றனர், ஆனால் புரிந்து கொள்வது கிடையாது, முற்றிலும் புத்தியற்றவர்களாக இருக்கின்றனர். புத்தியில் ஞானம் இல்லை என்பது முகத்தைப் பார்க்காமலே தெரிந்து விடுகிறது. சிவபாபா அறிவார், அனைவருக்குள்ளும் இருப்பதை அறிவார் (அந்தர்யாமி) ஆவார். இந்த பாபா வெளியில் உள்ளதை (பாஹர்யாமி) அறிவார். யார் முதல் நம்பரில் இருந்தார்களோ அவரது உடலில் தான் நான் வருகிறேன் என்று தந்தை கூறுகின்றார். இப்போது கடைசியில் இருக்கின்றார். இவரது உடலில் பிரவேசம் செய்கிறேன், ஏனெனில் இவரே பிறகு நாராயணனாக ஆக வேண்டும். ஆக சரீரம் கொடுத்ததற்கான வாடகை இவருக்கு கிடைக்கிறது. அதனால் தான் சௌபாக்கியசாலி ரதம் என்று கூறுகின்றார். பகீரதம் தண்ணீரின் கங்கையை எடுத்து வரவில்லை. இது ஆழமான ஞான விசயமாகும். இராவணனின் வழியில் இருக்கின்ற காரணத்தினால் மனிதர்கள் புரிந்து கொள்வது கிடையாது. இப்போது நீங்கள் புரிந்து கொண்டதால் மற்றவர்களுக்குப் புரிய வைப்பதற்கான யுக்தியை உருவாக்குங்கள். மற்றவர்களை எப்படி தூர தேசத்தில் வசிப்பவர்களாக ஆக்குவது, தந்தையின் அறிமுகம் எப்படி கொடுப்பது? என்ற எண்ணம் உங்களுக்கு வர வேண்டும். அவர்கள் பிரம்மத்தை நினைவு செய்கின்றனர். பிரம்மம் என்பது தத்துவமாகும். அங்கு பரமாத்மா இருக்கின்றார். ஆனால் அவர்கள் பிரம்மத்தையே பரமாத்மா என்று நினைக்கின்றனர். எவ்வாறு இந்து என்பது ஒரு தர்மமே கிடையாது! இந்துஸ்தானில் இருந்த காரணத்தினால் இந்து என்று பெயர் வைத்து விட்டனர். உண்மையில் இந்துஸ்தான் என்பது வசிக்கக் கூடிய இடமாகும். பிரம்ம தத்துவமும் பரமாத்மா வசிக்கக் கூடிய இடமாகும். ஆனால் மனிதர்களின் புத்தி அசுத்தமாக இருக்கின்ற காரணத்தினால் புரிந்து கொள்வது கிடையாது. இங்கு ஞானத்தின் விசயமாகும். உலகாய விசயங்களைப் பற்றி அனைவரும் நன்றாக அறிந்திருக் கின்றனர். இவர் (பிரம்மா பாபா) சுயம் வைர வியாபாரியாக இருந்தார், ஆக அனைத்தையும் அறிந்திருந்தார். மற்றபடி ஞான விசயங்களில் ஒன்றும் அறியாத குறைவான புத்தியுடையவராக, அசுத்த புத்தியுடையவராக இருந்தார். தந்தை வந்து அறிமுகம் கொடுக்கின்றார். எதுவரை பிராமணனாக ஆகவில்லையோ, தந்தையிடமிருந்து ஆஸ்தி எப்படி அடைய முடியும்! பிரஜைகளாக ஆகிவிடுவர். யாராவது சிறிது கேட்டாலும் பிரஜைகளாக ஆகிவிடுவர். ஒருவேளை

விகாரத்தில் சென்று கொண்டே இருந்தால் அவர்கள் தண்டனை அடைய வேண்டியிருக்கும். பிறகு வந்து சாதாரண பிரஜைகளாக ஆவார். இப்போது அனைவருக்கும் மரணம் நிகழ இருக்கிறது. அழிந்தே ஆக வேண்டும், சுடுகாடாக ஆகியே தீரும். இந்த நேரத்தில் மனிதர்களுக்கு எந்த மதிப்பும் கிடையாது. உங்களுக்கும் இல்லாமல் இருந்தது. இப்போது மதிப்பானவர்களாக ஆகிக் கொண்டிருக் கிறீர்கள். மற்றபடி விநாசம் ஏற்படும் போது கொசுக்களைப் போன்று இறப்பார்கள். தீபாவளியன்று எத்தனையோ கொசுக்கள் இறக்கின்றன! ஆக அனைவரும் இறந்தே ஆக வேண்டும். ஏனெனில் அனைவரும் வீட்டிற்குத் திரும்பி செல்ல வேண்டும். இவர் இறந்து விட்டார் என்று சத்யுகத்தில் கூறமாட்டார்கள். ஏனெனில் அங்கு அகால மரணம் இருக்காது. காலன் மீது வெற்றி அடைந்திருப்பர். மரணம் என்ற வார்த்தை அங்கு இருக்காது. நாம் இறப்பது கிடையாது என்பதை சத்யுகத்தில் அறிந்திருப்பர். சரியான நேரத்தில் ஒரு பழைய ஆடையை விடுத்து புதியதை எடுக்கிறோம் லி அவ்வளவு தான். பழைய ஆடையை நீக்கி புதியதை எடுக்கிறது என்று பாம்பின் உதாரணம் இருக்கிறது, ஆக பாம்பின் உதாரணம் சத்யுகத்திற்கானதே அன்றி இங்கு கிடையாது. குளவிக்கான உதாரணம் இந்த நேரத்திற்கானது, சந்நியாசிகளும் இந்த உதாரணம் கொடுக் கின்றனர். ஏனெனில் இங்கு செய்வதன் நினைவுச் சின்னம் தான் பக்தியில் நடைபெறுகிறது.

இப்போது குழந்தைகளாகிய நீங்கள் எந்த அளவிற்கு தாரணை செய்வீரகளோ அந்த அளவிற்கு விசால புத்தியுடையவர்களாக ஆவீர்கள், அந்த அளவிற்கு வருமானம் செய்வீர்கள். மருத்துவர்கள் எந்த அளவிற்கு விசால புத்தியுடன் இருக்கிறார்களோ அந்த அளவிற்கு புத்தியில் அதிக மருந்துக் கள் நினைவில் வைத்துக் கொள்வர், அந்த அளவிற்கு வருமானம் செய்வர். ஆக இங்கும் அவ்வாறு இருக்கிறது. சிலர் 250 ரூபாய் சம்பாதிக்கின்றனர், சிலர் ஆயிரக் கணக்கில் சம்பாதிக்கின்றனர். சிலர் அரசின் சொல்படி நடந்து கொண்டால் இலட்சம் இலட்சமாக கொடுத்து விடுகின்றனர். இங்கும் அவ்வாறே இருக்கிறது. சிலருக்கு ஞான கருத்தின் தாரணை கிடையாது, சிலர் மிகவும் தூர தேசத்தில் வசிப்பவர்களாக, விசால புத்தியுடையவர்களாக இருக்கின்றனர் எனில் மற்றவர் களையும் ஆக்குகின்றனர். முதலில் தூர தேசத்தில் வசிப்பவர், பிறகு விசால புத்தியுடையவர் என்று கூறலாம். புரிந்து கொள்ள வேண்டிய விசயம் அல்லவா! பிராமணர்களைப் போன்று சௌபாக்கியசாலிகள் யாரும் கிடையாது. ஒரேயடியாக அனைவரையும் மேலே அழைத்து சென்று விடுகிறீர்கள். மேலே பரமாத்மா இருக்கிறார் அல்லவா! ஆக அவரது அறிமுகம் கொடுக்கிறீர்கள். ஆக நீங்கள் அறிந்திருக்கிறீர்கள் அல்லவா! குழந்தைகள் தந்தையைப் பற்றி அறிந்திருக்கவே செய்வர். இப்போது பரலௌகீகத் தந்தை உங்களை தூய்மை ஆக்கி திரும்பி அழைத்துச் செல்ல வந்திருக்கின்றார். உழவருடைய குழந்தையின் கதை ஒன்று இருக்கிறது அல்லவா லி அரசர் உழவனின் பெண் குழந்தையை அழைத்து வந்தார், அவருக்குப் பிடிக்காததால் திரும்பி அனுப்பி வைத்து விட்டார். இங்கும் அவ்வாறு இருக்கிறது. யாருடைய புத்தியில் ஞான தாரணை யில்லையோ அவர்கள் தானாகவே சென்று விடுகின்றனர், இதில் தந்தை என்ன செய்ய முடியும்? புரிய வைக்கக் கூடியவர் பரம்பிதா பரமாத்மா ஆவார். அவர் பிரம்மாவின் மூலம் வேத சாஸ்திரங் களின் சாரத்தை கூறுகின்றார், வேத சாஸ்திரம் என்பது எந்த தர்ம சாஸ்திரம் கிடையாது. இது கிளையாகும், குழந்தைகளாகும். முக்கிய தர்மங்கள் நான்கு. அதில் பிராமண

தர்மமும் முக்கியமானது. வைரம் போன்ற பிறப்பு என்று தேவதைகளுக்குக் கூற முடியாது, ஏனெனில் இது கல்யாணகாரி, லீப், தர்மம் செய்யக் கூடிய யுகமாகும். லீப் மாதம் என்றால் தர்மம் செய்யக் கூடிய மாதம் என்று கூறுவர். இது சங்கமயுகம், கல்யாணகாரி யுகமாகும். மற்ற யுகங்களில் தீமை தான் ஏற்படுகின்றன, ஏனெனில் டிகிரி (கலை) குறைந்து கொண்டே செல்கிறது. நாளுக்கு நாள் கலைகள் குறைந்து கொண்டு தான் செல்கின்றன. இந்த யுகமோ கல்யாணகாரி யுகமாகும். ஆக மற்றவர்களுக்கு எப்படி புரிய வைப்பது என்று ஒவ்வொருவரும் புத்தியை உபயோகப்படுத்த வேண்டும். வழி எப்படி கூறுவது என்று ஆசிரியர் கூறிக் கொண்டிருக்கிறார், பிறகு ஒவ்வொரு வரின் தொழிலும் தனித்தனியானது. ஆக மற்றவர்களை எப்படி சகதியிலிருந்து வெளியேற்றுவது என்ற சிந்தனை வர வேண்டும். சிலர் சகதியிலிருந்து வெளியேற்று வதற்காக செல்கின்றனர், பிறகு தானே மாட்டிக் கொள்கின்றனர். ஆக புரிய வைப்பதற்கு மிகுந்த யுக்தி தேவை. முதலில் அல்லாவைப் பற்றி புரிய வைக்கும் போது ஆஸ்தியாகிய இராஜ்யத்தைப் பற்றியும் அறிந்து விடுவர் மற்றும் சிருஷ்டி சக்கரத்தையும் அறிந்து விடுவர். முதலில் அல்லாவை அறிந்து கொள்ள வேண்டும். அல்லா யார்? என்று ஆயிரம் முறை எழுதிக் கொடுத்தால் தான் இங்கு அமர முடியும். சிலர் இரத்தத்திலும் எழுதி கொடுக்கின்றனர், பிறகு சென்று விடுகின்றனர். மாயை ஒன்றும் குறைந்தது கிடையாது. நல்லது.

இனிமையிலும் இனிமையான, தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு, தாய் தந்தையாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீக குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) தூர தேசத்தில் வசிப்பவராகி தந்தையின் நினைவில் இருக்க வேண்டும், மற்றவர்களையும் தூர தேசத்தில் வசிக்கும் தந்தையின் அறிமுகம் கொடுக்க வேண்டும்.

2) கல்யாணகாரி யுகத்தில் அனைவருக்கும் நன்மை செய்யக் கூடிய யுக்தியை உருவாக்க வேண்டும் அனைவரையும் சேற்றிலிருந்து வெளியேற்றும் சேவை செய்ய வேண்டும்.

வரதானம் : சதா ஊக்கம்லிஉற்சாகத்தின் இறக்கைகள் மூலம் பறக்கும் கலையின் ஸ்திதியை அனுபவம் செய்யக்கூடிய கர்மயோகி ஆகுக.

ஊக்கம்லிஉற்சாகம் பிராமணர்களாகிய உங்களது பறக்கும் கலைக்கான இறக்கைகள் ஆகும். காரியம் செய்வதற் காகக் கீழே வருகிறீர்கள் என்றால் பறக்கும் கலையின் ஸ்திதி மூலம் கர்மயோகி ஆகி, கர்மத்தில் வருகிறீர்கள். இந்த ஊக்கம்லிஉற்சாகம் பிராமணர்களுக்குப் பெரிய திலும் பெரிய சக்தி ஆகும். சாரமற்ற வாழ்க்கை இல்லை. ஊக்கம்லிஉற்சாகத்தின் சாரம் உள்ளது என்றால் ஒரு போதும் மனச்சோர்வு அடைய முடியாது, சதா மனதில் குஷி இருக்கும். ஊக்கம்லிஉற்சாகம், புயலையும் கூடப் பரிசாக மாற்றி விடுகிறது. பரீட்சை அல்லது பிரச்சனையை மனமகிழ்ச்சியாக அனுபவம் செய்ய வைக்கிறது.

சுலோகன்: அசரீரி ஸ்திதியின் அப்பியாசியை சரீரத்தின் கவர்ச்சி கவர்ந்திழுக்க முடியாது.

மாதேஷ்வரி அவர்களின் விலைமதிப்பற்ற மகாவாக்கியங்கள்

மனித ஆத்மாக்களுக்கு நாம் முதல்லிமுதலில் எந்த முக்கிய பாயின்ட்டை புத்தியில் வைக்க வேண்டும்?

1. முதலிலோ தனக்கு இதில் பக்கா நிச்சயம் வைக்க வேண்டும் லி நமக்குக் கற்றுத் தருபவர் யார்?

2. இரண்டாவது பாயின்ட், நாம் அனைவரும் மனித ஆத்மாக்கள் மற்றும் பரமாத்மா நம் தந்தை. ஆத்மா லி குழந்தைகளாகிய நாம் மற்றும் பரமாத்மா தந்தை லி இரண்டும் வெவ்வேறு பொருள்கள்.

3. மூன்றாவது விஷயம், ஈஸ்வரன் முடிவற்றவரும் இல்லை, எங்கும் நிறைந்தவரும் இல்லை. இப்போது இந்த ஞானத்தை புத்தியில் வைக்க வேண்டும். ஆகவே அவரது ஞானம், மற்றவர் களுடையதை விடவும் தனிப்பட்டது. உலக மனிதர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்கள் லி நமக்குப் பரமாத்மா பற்றிய ஞானம் உள்ளது. இப்போது அவர்களிடம் கேளுங்கள் லி உங்களிடம் எந்த ஞானம் உள்ளது? அப்போது ஈஸ்வரன் சர்வ வியாபி எனச் சொல்வார்கள். இப்போது பரமாத்மாவே சொல்கிறார் லி எனது ஞானம் என் மூலமாகத் தான் கிடைக்கிறது. எப்படி வக்கீல் மூலமாக வக்கீலாவதற்கும், டாக்டர் மூலம் டாக்டராவதற்கும் கற்றுத்தரப் படுகிறது. அங்கே வக்கீல்களும் அநேகர் இருக்கலாம். ஒரு வக்கீலிடம் இல்லையென்றால் இன்னொருவர் கற்றுத் தருவார். ஒரு டாக்டரிடம் படிக்கவில்லை என்றால் இன்னொரு டாக்டர் கற்றுத்தர முடியும். ஆகவே நாம் எப்படிப் புரிந்து கொள்வது? இவர்களிடம் பரமாத்மாவின் ஞானம் என்று ஏதாவது இருக்கிறதா?

4. நாலாவது பாயின்ட், பரமாத்மா ஒவ்வொரு யுகத்திலும் வருவதில்லை. ஆனால் அவர் கல்பலிகல்பமாக, ஒரே ஒரு தடவை இந்த சங்கமயுகத்தில் அதாவது கலியுகக் கடைசி மற்றும் சத்யுக ஆரம்ப சமயத்தில் வருகிறார். அவர் வந்து அநேக அதர்மங்களை விநாசம் செய்வித்து, ஓர் ஆதி சநாதன சத்திய தர்மத்தை ஸ்தாபனை செய்விக்கிறார். இப்போது இந்த அனைத்து விஷயங் களையும் உறுதிப்படுத்த வேண்டும் லி கீதையின் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் இல்லை, சிவபரமாத்மா தாம், மற்றும் அவரும் கூட துவாபர யுகத்தில் வருவதில்லை… சங்கமயுகத்தில் தான் வருகிறார்.

5. ஐந்தாவது பாயின்ட், குரு இல்லாமல் பயங்கர இருள் எப்படி உருவானது? அந்த குரு யார்? மனித சிருஷ்டி தலைகீழான மரம் என்பது எப்படி? நாம் நம்முடைய ஐந்து விகாரங்களை எப்படி வெற்றி கொள்வது?

6. ஆறாவது பாயின்ட், நாம் அதே பாண்டவ யுத்த வீரர்கள். நம்மோடு தான் சாட்சாத் பரமாத்மா இருக்கிறார். இந்தப் பக்கம் தான் வெற்றி கிடைக்கும்.

7. ஏழாவது பாயின்ட், பரமாத்மா சுயம் சர்வசக்திவான் என்பதால் யார் பரமாத்மாவின் முழுமையான துணையைப் பெற்றிருக்கிறார்களோ,

அவர்களுக்குத் தான் பரமாத்மா மூலம் ஒளிலிசக்தி இரண்டு கிரீடங்களும் கிடைக்கும். இப்போது இந்த அனைத்து விஷயங்களையும் புத்தியில் வைப்பது தான் ஞானம் எனச் சொல்லப்படும்.